(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க் காணும் சட்டமுன்வடிவுகள் 1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு திருத்தமேதுமின்றி நிறைவேறியதாக சட்ட மன்ற மேலவை தலைவரிடமிருந்து அறிக்கை வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/1971).

2. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 41/1971).

மேலும், தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1971) சட்ட மன்ற மேலவையில் 15—12—1971-ம் நாளன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதும் செய்யவில்லை என்றும் அறிவிப்பு வரப் பெற்றுள்ளது.

(5) அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர் களே, சட்டப் பேரவை 21 (3) விதியின்கீழ், "இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள 'அரசினர் தனித் தீர்மானங்கள்' என்ற தலைப்பின்கீழுள்ள இனம் (2) & (3) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பட்ட பிறகு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்," என முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: Even on excess Demands I would like to say something.

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது 1966-ம் வருஷத்திய டிமாண்ட். நூற்றுக் கணக்கான தடவைகள் இங்கே விவாதிக்கப் பட்டிருக்கிறது. திரு. தங்கமணி அவர்கள் இந்த மன்றத்திற்குப் புதியவர்கள். பொதுவாக எக்சஸ் டிமாண்ட் பற்றி விவாதம் நடை பெறுவதில்லை. தாங்கள் பேசவேண்டுமென்று விரும்பினுல் தாராள மாகப் பேசலாம். ஆனல் இன்றைக்கு நிறையத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதாலும், இன்று சட்டமன்றக் கூட்டம் முடிய வேண்டுமென்ற பொதுவான ஒரு கருத்து இருப் பதாலும் புதிய மரபை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் பேசவேண்டுமென்று விரும்பினுல் தடுக்க வில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Even as regards Excess Demands the matter has to be put to vote here. So, sometimes if there was an excessive expenditure which could have been avoided, I would like to say something. That has been brought to the knowledge of the Ministry by the Public Accounts Committee. The House also takes note of it. So, it is only for a limited purpose. But I submit to your ruling. Generally, even in the Lok Sabha on Excess Demands if there is unnecessary Excess Demand on a particular item, that is spot-lighted.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை எண் 54/1971) ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 and 3, were put and carried.

Clause 1, the Schedule, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move :

" That the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 (L.A. Bill No. 54 of 1971) be passed ".

The motion was put and carried, and the Bill was passed into law.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1971).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, " தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1971) ஆய்வுக்கு எடுத்துக்

---

* தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.